மேன்முறையீட்டு உரிமை.

58. (1) எவரேனும் பகிரங்க அலுவலரொருவர் தொடர்பில் 56 ஆம் உறுப்புரையின்கீழான அல்லது 57 ஆம் உறுப்புரையின்கீழான குழுவொன்றினால் அல்லது எவரேனும் பகிரங்க அலுவலரினால் ஆக்கப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம், பதவிநீக்கம் தொடர்பான கட்டளையொன்றினால் அல்லது ஓர் ஒழுக்காற்றுக் கருமம் மீதான ஏதேனும் கட்டளையொன்றினால் அவ்வாறு இன்னலுறும் அலுவலர், ஆணைக்குழுவுக்கான மேன்முறையீடொன்றைச் செய்வதிலும், கேட்பதிலும், தீர்மானிப்பதிலும் பின்பற்றவேண்டிய





நடவடிக்கைமுறையும், மேன்முறையீடொன்று கேட்கப்பட்டு முடிவுறுத்தப்படும் காலப்பகுதியும் தொடர்பாகக் காலத்துக்குக்காலம் ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் அத்தகைய விதிகளுக்கிணங்க அத்தகைய கட்டளைக்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஆணைக்குழுவானது, அத்தகைய மேன்முறையீட்டின்மீது, எக்கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்படுகின்றதோ அக்கட்டளையை மாற்றுவதற்கான அல்லது உறுதிப்படுத்துவதற்கான, அல்லது அது தொடர்பாகப் பணிப்புகள் விடுப்பதற்கான அல்லது ஆணைக்குழு பொருத்தமானதெனக் கருதுகின்றவாறு அத்தகைய மேலதிக அல்லது வேறு விசாரணையைக் கட்டளையிடுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் அதனால் ஆக்கப்படும் விதிகளைக் கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.